**HMOP NO. 17/2024**
**Date 20.11.2025**
**எ.ம.சா.1 ரேணுகா**
**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

07.06.2010 ல் எனக்கும் மனுதாரருக்கும் பெரியோர்களால் நிச்சயம் செய்யப்பட்டு திருமணம் நடைபெற்றது. எனக்கு 16.07.2011 ம் தேதியன்று ஜீவஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்தது. 24.12.2012 ம் தேதியன்று லக்சியா என்ற பெண் குழந்தை பிறந்தது. மேற்படி 2 குழந்தைகளும் என்னுடன் தான் இருந்து வருகிறார்கள். நானும், மனுதாரரும் 2019 ம் ஆண்டில் இருந்து பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம். நாளது தேதி வரை பெரியோர்களை வைத்து பேச்சு வார்த்தை நடத்தியும் எந்த பயனும் இல்லை. மனுதாரர் கோரிய பரிகாரம் வழங்குவதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. எனக்கும், என்னுடைய 2 குழந்தைகளின் வாழ்நாள் ஜீவானாம்சத்திற்கும் ரூ. 10,00,000/- நீதிமன்றத்திற்கு வெளியே ஏற்பட்ட சமாதானத்தின் அடிப்படையில் நாளது தேதியில் பெற்றுக்கொண்டேன். நானும், மனுதாரரும் அவரவர் வாழ்க்கையை தனித்தனியாக பிரிந்து வாழ முடிவு செய்துள்ளோம். மனுப்படி உத்தரவாக எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

(Sd/-P.Mahindra Varma)
Subordinate Judge,
Sankarankovil.